Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/07-09

வானத்திற்கு வர்ணம் தீட்டுபவரே..
உம்மைப்போல யாரும் இல்லை
உம்மைப்போல உண்மையுள்ள நண்பன் யாரும் இல்லை
உம் அன்பு எங்களை புதிதாக்கினது
இயேசுவின் அன்பைப்போல் வேறொரு அன்பு இல்லை..

ஓ,ஆபிரகாமின் தேவனே!..
உம்மால் எதையும் செய்ய முடியும்
வல்லமையுள்ள வார்த்தைகளை உடையவரே
வார்த்தையினால் சகலத்தையும் உண்டாக்கினவரே..

என்னை புரிந்து வைத்திருப்பவரே..
என்னை எனக்கு காட்டுபவரே
உம்முடைய கிருபை போதும்..

எனக்காக ஒரு தரிசனத்தை வைத்திருக்கிறீர்..

என் ஒவ்வொரு இருதயத் துடிப்பிலும்
என் ஒவ்வொரு பாட்டினாலும்
என் ஒவ்வொரு ஜெபத்தினாலும்
என் ஒவ்வொரு காணிக்கையினாலும்
என் ஒவ்வொரு சிந்தையினாலும்
நீர் மகிமைப்படும்..
– டான் மோயன்



Owned and Published by : S.Paulraj Kennedy from A-1,Deju Plaza,No.2,South Avenue,Srinagar Colony,
Saidapet,Chennai-600 015.Ph:+91- 44 - 22353500
Printed by : Jolly Peter at Sharp Offset Printers,New No.86,Old No.223,Peters Road,Royapettah,
Chennai-600 014.Ph:+91- 44 - 28480607
Editor: Nija Kennedy

# மினி எக்காளம்

VOL . 3 ISSUE . 5 தனிப்பிரதி ரூ 20/= டிசம்பர் 2009



வானத்திற்கு
வர்ணம்
தீட்டுபவரே
உம்மைப்போல யாரும் இல்லை




**ஆகையால், நீங்கள் கைகொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள்; அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள்; ஏனெனில் அவர்கள் சொல்லுகிறார்கள்; சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்.**

**- மத்தேயு 23:3**

வேதபாரகரும், பரிசேயர்களும் நியாயப்பிரமாணத்தின் போதனைகளை அதிகாரப்பூர்வமாக, போதனை செய்தார்கள். இயேசு கிறிஸ்து இவர்கள் போதனைகளின்படி செய்யச் சொன்னார். ஆனால், அவர்கள் செய்கையை நாம், பின்பற்றக்கூடாது என்று கூறினார். இவர்கள் போதிப்பதின்படி நடக்கத் தவறியதால், இயேசு கிறிஸ்து இவர்களின் மாய்மாலத்திற்கு எதிர்த்து நின்றார். மிகவும் நல்லவர்கள் போல பாசாங்கு செய்து மற்றவர்களை ஏமாற்றினர். இவர்களது போதனை மிகச் சரியானதாகவும், ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருந்தது. இன்றைக்கும் இதேபோல பிரசங்கிமார்கள் உண்டு. அந்த போதனைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அவர்கள் வாழும் வாழ்க்கை முறைகளை நாம் பின்பற்றக்கூடாது. மற்றவர்களுக்கு போதிப்பார்கள்; அவர்கள் அதன்படி நடக்கமாட்டார்கள்.

மதத்தலைவர்கள், மக்கள் பின்பற்றி நடப்பதற்கு கடினமான சட்டங்களை ஏற்படுத்தினார்கள். வேதத்தோடு தாங்களாக விளக்கங்கள் அளித்து பாரம்பரியங்களை உண்டாக்கி மக்கள் அதை பின்பற்றும்படி வற்புறுத்தினார்கள். தேவனது கட்டளைகளைக் காட்டிலும், தங்களது பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததால் தேவனை பின்பற்றுவது அவர்களுக்கு



சடங்காச்சாரமாக மாறிற்று.

கர்த்தருடைய வார்த்தையை யார் பேசினாலும், அது வேதத்தின்படி இருக்கிறதா என்பதை அறிந்து கொண்டு அதை பின்பற்றி நடக்கவேண்டும். போதிப்பவர்களின் வாழ்க்கையையும், அவர்களின் செய்கைகளையும் நாம் பின்பற்றக்கூடாது. அவர்கள் போதிப்பதன்படி வாழாவிட்டால், அவர்களின் வாழ்க்கையைப் பார்த்து நாம் சோர்ந்துபோய், கர்த்தரை விட்டுவிடுவோம். நமக்கும் கர்த்தருக்கும் உள்ள ஐக்கியம்தான் முக்கியம். கர்த்தருக்குள் நாம் வளர வேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கையை முன்மாதிரியாக பார்த்து அதன்படி வாழவேண்டும்.

## கிறிஸ்துவை விட்டு விலகச் செய்த பாரம்பரியம்

ஒருமுறை கிறிஸ்துவை அறியாத ஒரு சகோதரி தன் நண்பர்கள் மூலமாக, இயேசு கிறிஸ்துவை அறிந்து, அவரை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு ஆவிக்குரிய சபைக்கு சென்றார்கள். ஆனால், அந்த சபையிலுள்ள விசுவாசிகளோ, பாரம்பரியமாகவும், சடங்காச்சாரமாகவும் நடந்து கொண்டார்கள்; அப்படி நடக்க அந்த சகோதரியையும் வற்புறுத்தினார்கள். புறம்பான மனுஷியின் நடத்தையைத்தான் பார்த்தார்களேயொழிய, அந்த சகோதரிக்குள்ளிருந்த உள்ளான மனுஷியைக் காண தவறிப்போனார்கள். இதை செய், அதை செய்யாதே என்று சொன்னார்களே தவிர ஆவியினாலே கர்த்தரை தொழுது கொள்ள வேண்டும் என்பதைச் சொல்ல தவறிப்போனார்கள். பாவிகளை அழிக்க அல்ல; அவர்களை மனந்திரும்பவே அழைக்கவந்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆனால், இவர்களுக்கோ இந்த கர்த்தருடைய சிந்தை இல்லை. இதைச் செய்தால் கர்த்தருக்கு பிடிக்கும்; இதைச் செய்யாவிட்டால் கர்த்தர் தண்டனை கொடுப்பார் என்று சொல்லி, கர்த்தருடைய உண்மையான அன்பை அறிந்து கொள்ளவிடாமல் பண்ணிவிட்டார்கள். அந்த ஆத்துமாவை அவர்கள் பார்க்கவில்லை. ஆனால் கர்த்தரோ நம் ஆத்துமாவை மிகவும் நேசிக்கிறார். கர்த்தரை நெருங்கி வந்த அந்த சகோதரியை இவர்களின் பாரம்பரியமே கர்த்தரிடமிருந்து விலகிப் போகச் செய்தது.

**மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள் நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை.**

**- மத்தேயு 23:13**

மாயக்காரர்கள் மனிதனால் உண்டாக்கப்பட்ட கட்டளைகளை தேவனுடைய கட்டளைகளைப்போல எடுத்துக் கொண்டார்கள். ஜனங்களை அக்கட்டளை களைக் கைக்கொள்ளும்படி சொல்லி பலவித கட்டுப்பாடுகளை ஜனங்கள் மேல் சுமத்தினார்கள். தாங்கள் ஒன்றையும் கைகொள்ளமாட்டார்கள் (மத்தேயு *23:4)*

கட்டளைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தேவனை கனப்படுத்தாமல், தங்களை மிகவும் நல்லவர்கள் போல வெளியே காட்டிக் கொண்டார்கள். மற்றவர்கள் தங்களை காணவேண்டும் என்பதற்காக நற்காரியங்களையும் நற்செயல்களையும் செய்தார்கள். தங்களை மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்று எதிர்பார்த்து அதற்கேற்றபடி நடந்து கொண்டார்கள். மற்றவர்களின் பார்வைக்காக நீண்ட ஜெபம் செய்தார்கள். விருந்துகளில் முக்கியமான இடத்தில் உட்கார விரும்பினார்கள். எல்லோரும் காணும்படியாக ஜெபிப்பதும், பிறரை குற்றஞ்சாட்டுவதிலும், குறைகூறுவதிலும் ஈடுபட்டார்கள். மற்றவர்களின் பார்வைக்கு பரிசுத்தராக தங்களை காண்பித்தார்கள். அவர்கள் உள்ளமோ பாவத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருந்தது. நம்மிடம் மாய்மாலக்காரர் களின் சுபாவங்கள் இருந்தால், நம்மை சரி செய்து கொள்வோம்.

## ஓய்வு நாளில் வேலை செய்யலாமா?

ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக (உபாகமம் 5:13) என்பது நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளில் ஒன்று. இயேசுகிறிஸ்து நியாயப் பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார். தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நியாயப் பிரமாணத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரேவேலரை விடுவித்ததை நினைவு கூறுவதற்காக, ஓய்வுநாளை ஆசரிக்க தேவன் அவர்களுக்கு கட்டளையிட்டார். மனிதர்கள் ஆறுநாட்கள் வேலை செய்துவிட்டு ஏழாவது நாள் ஓய்வெடுக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டம். ஆனால், மதத்தலைவர்கள், ஓய்வு நாளைக்குறித்த தங்களது சட்டங்கள்தான் முக்கியம் என்று கருதினார்கள்.

இயேசுகிறிஸ்து ஓய்வு நாளில் ஜனங்களை சுகப்படுத்தினதற்காக, மதத்தலைவர்கள் அவர்கள்மேல் குற்றஞ்சாட்டினார்கள். சாத்தானின் பலவீனப்படுத்தும் ஆவியினால் கூனியாக்கப் பட்ட (18 வருடங்கள்) ஒரு ஸ்திரீயை, இயேசு கிறிஸ்து தொட்டு நிமிர்ந்து நிற்கச் செய்தார். ஜெப ஆலயத் தலைவன், ஓய்வுநாளில் இயேசு கிறிஸ்து அவளை சுகப்படுத்தியதால் கோபமடைந்து ஜனங்களிடம் வேலை செய்வதற்கு ஆறுநாட்கள் உள்ளது. அந்த நாட்களில் குணம்பெற வாருங்கள் என்றும் ஓய்வு நாளில் குணப்படுத்துவது தவறு என்றும் கூறினான். இயேசு கிறிஸ்து அவனிடம், மாய்மாலக்காரனே, ஓய்வு நாளில்கூட கழுதையையும், எருதையும் தண்ணீர் குடிக்க அழைத்து செல்லுகிறீர்கள். சாத்தானின் பிடியிலிருந்த பெண்ணை, ஓய்வுநாளில் அவள் நோயிலிருந்து விடுவிப்பது நிச்சயமாக தவறல்ல என்று கூறினார் (லூக்கா 13:16). கட்டளைகளை ஆசாரமுறையில் பின்பற்றுவதைவிட, இரக்கத்தோடு





மற்றவர்களுக்கு உதவி செய்வதே முக்கியம்.

ஊழியம் செய்யும் ஒரு சகோதரன் ஞாயிற்றுக்கிழமைகளில் பிள்ளைகள் பாடங்களை படிக்கக்கூடாது என்றும், தேர்வுகள் எழுதக்கூடாது என்றும் சொல்லிக் கொண்டிருந்தார். ஓய்வுநாளை கர்த்தர்தான் உண்டாக்கினார். இப்படி போதிக்கிற வர்கள் பரிசேயர், வேதபாரகரைப்போல மாய்மாலக் காரர்களாயிருக்கிறார்கள். ஆண்டவரை உயர்வாக பார்ப்பதை விட்டுவிட்டு தங்களது பாரம்பரியத்தை பெரிதாக பார்க்கிறார்கள். அதனால்தான் நான் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறேன் என்று இயேசுகிறிஸ்து கூறினார்.

**“ சாத்தானின் பிடியிலிருந்த பெண்ணை, ஓய்வுநாளில் அவள் நோயிலிருந்து விடுவிப்பது நிச்சயமாக தவறல்ல. ”**

## முன்னோர்களின் பாரம்பரியம்

இயேசு கிறிஸ்து ஒருமுறை பரிசேயனுடைய வீட்டில் சாப்பிடும் படி அழைக்கப்பட்டிருந்தார். அவர் கை கழுவாமல் சாப்பிடுவதைக் கண்டு, ஏன் கை கழுவாமல் சாப்பிடுகிறீர்கள் என்று கேட்டான். இயேசு கிறிஸ்து, தன்னை அழைத்த பரிசேயன் மாய்மாலம் பண்ணுவதை கண்டித்து உணர்த்தினார். நீங்கள் பாத்திரத் தையும், குவளையையும் வெளிப் புறத்தில் சுத்தமாக கழுவுகின்றீர்கள். ஆனால், உங்கள் உள்ளமோ, பேராசையினாலும், அநீதியினாலும், கொள்ளையடிப்பதினாலும், பிறரை ஏமாற்றித் தீமை செய்யும் காரியங்களினாலும் நிறைந்திருக்கிறது (லூக்கா 11:39).



பரிசேயர்களும், மதத்தலைவர்களும் வெளிப்பார்வைக்கு, மிகுந்த பக்தியுள்ளவர்களாக பரிசுத்தமுள்ளவர்களாக, காணப்பட்டார்கள். ஆனால், அவர்கள் உள்ளமோ அசுத்தங்களினால் நிறைந்து தூய்மையற்று காணப்பட்டது. நம்முடைய இருதயம் எப்படியாக இருக்கிறது என்பதை நாம் சோதித்துப் பார்ப்போம். நம்முடைய இருதயம் சுத்தமாக இருந்தால், நம்மிடமிருந்து வெளிப்படும் செயல்களும். வார்த்தைகளும் நல்லவைகளாயிருக்கும். அவைகள் நம்மை வெட்கப்படுத்தமாட்டாது. மாய்மாலக்காரர்கள் வெளி உடம்பை சுத்தமாக வைத்துக் கொண்டு, உள்ளத்திலோ பாவத்தினால நிறைந்திருப்பார்கள். வெளித்தோற்றத்தில் நல்லவர்களைப் போல நடிப்பார்கள். உள்ளமோ பகையினாலும், வஞ்சகத்தினாலும் நிறைந்திருக்கும், நீதியற்ற செயல்கள் மூலம்

மற்றவர்களுக்குரியதை பறிப்பதினாலும், பலவந்தப்படுத்தி அல்லது பயமுறுத்தி பணத்தை அடைவதினாலும், மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் எண்ணங்களினாலும், தீய சிந்தனைகளினாலும் நிறைந்திருப்பார்கள்.

சீஷர்கள் கைகழுவாமல் சாப்பிட்டதால், யூதர்கள் இயேசுகிறிஸ்துவிடம், உம்முடைய சீஷர்கள், முன்னோர்களின் விதிமுறைகளை பின்பற்றவில்லை என்று குற்றஞ்சாட்டினார்கள். பரிசேயர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை தொடர்ந்து செய்து வருகின்றனர். கடையிலிருந்து வரும்போது ஸ்நானம் பண்ணாமல் சாப்பிடமாட்டார்கள். செம்புகளையும், கிண்ணங்களையும் செப்புகுடங்களையும் மனைகளையும் கழுவுகிறதுமல்லாமல், வேறு அநேக ஆசாரங்களையும் கைகொண்டார்கள். கை கழுவுவது நல்லதுதான். ஆனால், பாரம்பரியத்தை மேன்மைபாராட்டக்கூடாது. பாரம்பரியத்தை வைத்து ஒருவரை குற்றப்படுத்தி கர்த்தரை விட்டு அவர்களை விலகச் செய்வதைக் காட்டிலும், கர்த்தருடைய அன்பை அவர்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அவர்களை வழிநடத்துவது மேலானது.

மனிதனால் உருவாக்கப்பட்ட விதிமுறைகள் பயனற்றவை. தேவனுடைய கட்டளைகளுக்கே நாம் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். சிலர் வருடத்துக்கு ஒருமுறை அல்லது விசேஷ பண்டிகை நாட்கள் மட்டும் சடங்காச்சாரமாக ஆலயத்துக்கு செல்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமை ஆலயம் செல்வது கூட சடங்காச்சாரமாக மாறிவிட்டது. உண்மையான இரட்சிப்பை பெற்றுக் கொள்ளாமல், பெயருக்கு கிறிஸ்தவர்களாக வாழ்பவர்கள், சடங்காச்சாரங் களையும், பாரம்பரியத்தையும் பின்பற்றுகிறார்கள். நல்லநாள், நல்லநேரம் பார்க்கிறார்கள் (கலாத்தியர் *4:10*). வெளியே கிளம்பிச் செல்லும்போது பூனை குறுக்கே வந்து விட்டாலும், எங்கே போகிறீர்கள் என்று கேட்டாலும் அபசகுனமாக (கெட்ட நேரம்) நினைக்கிறார்கள். ஏதாவது கெட்ட காரியங்கள் தங்கள் வாழ்க்கையில் நடந்துவிடும் என்றும், தாங்கள் செய்ய விரும்பும் காரியங்கள் வாய்க்காதே போய்விடும் என்று நம்புகிறார்கள். முன்னோர்களின் பாரம்பரியத்தை இன்னும் கடைபிடிக்கிறார்கள். இவர்கள் இந்த உலகத்தை விட்டு செல்லும்போது பரலோகத்திற்கு செல்ல முடியாது.

## முழு இருதயத்தோடு ஆராதனை

> **மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்றும், எழுதி யிருக்கிற பிரகாரம், மாயக்காரராகிய உங்களைக் குறித்து, ஏசாயா நன்றாய் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறான்.**
>
> - மாற்கு 7:7

என்று இயேசு கிறிஸ்து பரிசேயர்களிடமும் வேதபாரகர்களிடமும் கூறுகிறார். உண்மையான மனந்திரும்பதலில்லாமல், ஆவியோடும், உண்மையோடும் ஆண்டவரை தொழுது கொள்ளாமல், சடங்காச்சாரமாக ஆராதிப்பது தவறு. முழு



இருதயத்தோடு அவரைத் தேடவேண்டும். அவர்கள் உதடுகளினால் என்னை கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்கு தூரமாய் விலகியிருக்கிறது (மாற்கு *7:6*). அவர்கள் வாழ்க்கையில் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. வீணான காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். உண்மையாய் ஆராதிப்பது என்பது, தேவன் நம் வாழ்க்கையில் செய்த நன்மைகளையும், நமக்கு கொடுத்த சுகத்தையும், பாதுகாப்பையும், ஆசீர்வாதங்களையும், அவர் நம் மீது வைத்த அன்பையும் நினைத்து, தேவன் மீதுள்ள அன்பினாலும், நன்றியினாலும் நிறைந்து, அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்வது. நாம் பரிசுத்தவான்கள் என்று மற்றவர்கள் நம்மை உயர்வாக நினைப்பதற்காக அவரை ஆராதிப்பது வீணானது. மனிதர்கள் நம்மை மதிக்கவேண்டும், உயர்வாக நினைக்க வேண்டும் என்பதை விட கர்த்தர் நம்மை குறித்து என்ன நினைக்கிறார் என்பதே முக்கியம். மனிதர்களுக்கு பிரியமான ஒரு வாழ்க்கை வாழ்வதை விட கர்த்தருக்கு பிரியமானதொரு வாழ்க்கை வாழ்வோம். மனிதர்களால் உண்டாக்கப்பட்ட சட்டங்களையும், ஆராதனை முறைகளையும் பின்பற்றுவதால் ஒரு பிரயோஜனமும் இல்லை. வேத வார்த்தையின்படி ஆவியோடும், உண்மையோடும் ஆராதித்து, தேவ ஆவியானவரின் வழிநடத்துதலின்படி வாழும் வாழ்க்கையே நமக்கும், நம்மை காண்கிற மற்றவர்களுக்கும் பிரயோஜனத்தைத் தரும்.

> **“உண்மையாய் ஆராதிப்பது.. தேவன் மீதுள்ள அன்பினாலும், நன்றியினாலும் நிறைந்து, அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்வது ”**

## வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை

வேதபாரகரும், பரிசேயரும் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையைப் போன்றவர்கள் (மத்தேயு *23:7*). கல்லறையின் வெளிப்புறம் நன்றாக இருக்கிறது. ஆனால், கல்லறையின் உள்ளே இறந்தவர்களின் எலும்புகளும், அசுத்தங்கள் பலவும் இருக்கின்றன.அதேபோலத்தான் அவர்களைக் காண்கிறவர்கள், அவர்களை நல்லவர்கள் என்று நினைக்கிறார்கள். வெளிப்பார்வைக்கு நேர்மையானவர்களாக, நியாயமுள்ளவர்களாக, நீதிமான்களைப்போல காணப்படுவார்கள். ஆனால், உள்ளம் முழுவதும் மாயத்தினாலும், தீமையினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்து கறைப்பட்டிருக்கும். அவர்கள் உண்மை பேசுவதில்லை. அவர்கள் உண்மையை புரட்டும் பொய்யர்கள். அவர்கள் வாய்கள் திறந்த கல்லறைகளைப் போன்றவைகள். அவர்கள் பிறரிடம் அன்பாக பேசி, அவர்களை கண்ணியில் சிக்கவைப்பார்கள் (சங்கீதம் *5:9*). அவர்கள் சொல்லும் காரியங்கள் பாம்புகளின் விஷத்தைப் போன்றது. அவர்களது வாய் சபிப்பினாலும், கசப்பினாலும் நிறைந்திருக்கும் (ரோமர் *3:13,14*) அவர்களிடம் தெய்வபயமில்லை.

நாம் பாவம் செய்வதினால் மட்டுமல்ல, அந்த பாவத்தை சிந்திக்கும்போதே தீட்டுப்படுகிறோம். எல்லா பாவங்களுக்கும் பிறப்பிடமே இருதயத்தின் சிந்தனைகளே. இருதயத்தின் எண்ணங்கள் சுத்தமாயிருந்தால் நம் வாழ்க்கை முழுவதும் சுத்தமாயிருக்கும். எல்லா காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள் (நீதிமொழிகள் 4:23). இருதயத்திலிருந்து புறப்படும் சிந்தனைகளை, ஆசைகளை, சொற்களை, கண்களின் பார்வையை, செயல்களை காத்துக் கொள்ள வேண்டும். வாயிலிருந்து புறப்படும் தீயசொற்கள் இருதயத்திற்குள்ளிலிருந்து புறப்பட்டுவரும். இவைகளே மனுஷனை தீட்டுப்படுத்தும் (மத்தேயு15:19).

## குற்றச்சாட்டும் மாயக்காரர்

மாயக்காரர்கள் தவறு செய்வார்கள். ஆனால் அதே தவறை செய்யும் மற்றவர்களை குற்றஞ்சாட்டுவார்கள். அதனால் இயேசு கிறிஸ்து இவர்களைப் பார்த்து மாயக்காரரான நீங்கள் முதலில் உங்கள் கண்ணிலிருந்து உத்திரத்தை (மரத்துண்டை) அகற்றுங்கள். பின்னரே, உங்கள் சகோதரனின் கண்ணிலிருந்து துரும்பை (தூசியை) அகற்ற முன்வாருங்கள் (மத்தேயு 7:5) என்று சொல்கிறார். ஒரு சகோதரி தன்னுடைய மகன் செய்யும் தவறுகளை கண்டு கொள்ளவே மாட்டார்கள். அந்த தவறுகளை கண்டித்து உணர்த்தி மகனை திருத்த முன்வரமாட்டார்கள். அவர்களுடைய மகன் செய்யும் காரியம் தேவனுக்கு பிரியமில்லாத செயல் என்பதை அறிந்தும் அறியாதவர்கள் போல நடந்து கொள்வார்கள். ஆனால், தன் மகன் செய்யும் அதே தவறை தன் பக்கத்து வீட்டு பையன் செய்யும்போது, அதை பெரிதுபடுத்தி குற்றவாளி என்று விமர்சித்து பேசுவார்கள். இந்த சகோதரி செய்வது மாய்மாலமாகும். நாம் எப்படியாக இருக்கிறோம்? நம்முடைய பிள்ளைகள் முழுமையாக இல்லாதபோது மற்றவர்களின் பிள்ளைகளை குறைசொல்லுபவர்களாக இருக்கிறோமோ? நாம் மற்றவர்களை குறைசொல்லுபவர்களாக இருந்தால், சற்று யோசித்துப் பார்ப்போம். நாம் அந்த தவறுகளை செய்கிறோமா? நாம் சரியாகத்தான் இருக்கிறோமா என்று சிந்தித்துவிட்டு பின் பேசுவோம்.நாம் எப்படி மற்றவர்களை நியாயந் தீர்க்கிறோமோ அப்படியே தேவன் நம்மை நியாயந்தீர்ப்பார். மற்றவர்களை நம்மைபோலவும், மற்ற பிள்ளைகளை நம்முடைய பிள்ளைகள் போலவும் நேசிப்போம். அப்படி நேசிக்கும்போது யாரையும் குறைசொல்ல மாட்டோம். இயேசு கிறிஸ்துவின் அன்பு நமக்குள் வரும்போது நாமும் அவரைப்போல மாறுவோம்.

## மாயக்காரர் - உபவாசம், தர்மம், ஜெபம்

மாயக்காரர் உபவாசிக்கும்போது, மற்றவர்கள் காணும்படியாக உபவாசிக்கிறார்கள் (மத்தேயு 6:16). தங்களை பரிசுத்தவான்கள் என்று காட்டிக் கொள்வதற்காக வாரத்திற்கு இருமுறை உபவாசிக்கிறார்கள். சிலர், லெந்து நாட்கள் (40 நாட்கள்) மாம்சம் சாப்பிடுவதில்லை என்று பாரம்பரியத்தை கடைபிடிக் கிறார்கள். நாம் பரிசுத்தமாக வாழ்ந்து, தேவனுக்கும் நமக்கும் உள்ள உறவு சரியாக



இருந்து விட்டு பின் உபவாசிப்பதே மேலானது. பாரம்பரியமாக உபவாசிப்பது வீண். நாம் உபவாசம் இருப்பதை விளம்பரப்படுத்தக்கூடாது. சிலர், இத்தனை நாட்கள் உபவாசம் இருந்தேன் என்று சுயவிளம்பரம் செய்வார்கள். உபவாசம் இருப்பது நல்லது. ஆனால் கர்த்தர் விரும்புகிறபடி உபவாசமிருக்க வேண்டும். முதலாவது ஏழை, எளிய ஜனங்களுக்கு உதவி செய்பவர்களாக இருக்கவேண்டும். பின் உபவாசமிருக்க வேண்டும் (ஏசாயா 58:6,7).



மாயக்காரர் தர்மம் செய்யும்போது, மற்றவர்கள் தங்களை மதிக்கவேண்டும் என்று விரும்பி, தாங்கள் செய்யப்போவதை அறிவிக்கிறார்கள் (மத்தேயு 6:2). நாம் ஏழை மக்களுக்கு உதவி செய்யும்போது, நாம் செய்யப்போவதை விளம்பரப்படுத்தக்கூடாது. யாரும் அறியாதவாறு உதவி செய்யவேண்டும். நாம் மாயக்காரர்களைப் போல எல்லோரும் காணும் வகையில் தர்மம் செய்யக்கூடாது.

நாம் மாயக்காரரைப்போல ஜெபிக்கக் கூடாது (மத்தேயு 6:5). அவர்கள் மற்றவர்கள் காணும்படியாகவும், உரத்த குரலில் மற்றவர்கள் கேட்கும்படியாகவும் ஜெபிக்க விரும்புகிறார்கள். நாம் யாரும் அறியாத வகையில் தனியாக ஜெபிக்க வேண்டும். அப்படி ஜெபித்தால், தேவன் யாவரும் காணும் வகையில் ஜெபத்திற்கான பலனை தருவார். மாயக்காரர்கள் தங்களை தாங்களே பெரிதாக நினைத்து, மற்றவர்களும் தங்களை பெரிதாக நினைக்கவேண்டும் என்பதற்காக ஏராளமான வீண் வார்த்தைகளைச் சொல்லி ஜெபிப்பார்கள்.

ஒரு சமயம் ஒரு சகோதரி முதல் முறையாக ஆவிக்குரிய சபைக்கு போகலாமென்று வாஞ்சையோடு சென்றார்கள். அந்த சபையில் முதல் ஆராதனை ஏற்கெனவே தொடங்கி, முடியும் தருவாயில் இருந்தது. அடுத்த இரண்டாம் ஆராதனைக்கு செல்லலாமென்று வெளியிலிருந்த படிக்கட்டில் அந்த சகோதரி உட்கார்ந்தார்கள். அநேகர் அப்படியாக உட்கார்ந்திருந்தார்கள். ஒரு வயதான அம்மாவும் உட்கார்ந்திருந்தார்கள். நிற்பதற்கு வேறு இடம் இல்லாததால், அப்படியாக உட்கார வேண்டிய சூழ்நிலை. அப்பொழுது அந்த சபையைச் சேர்ந்த ஒரு சகோதரி, எல்லாரையும் மற்றவர்கள் நடப்பதற்குவழிவிட்டு உட்காரும்படி சொன்னார்கள். அந்த வயதான அம்மாவை மிகவும் கண்டிப்புடன் உடனே எழும்பும்படி சொன்னார்கள். தனது கால் வலிக்கின்றது என்று சொன்ன அந்த அம்மாவின் குரலை அந்த சகோதரி சட்டைசெய்யவில்லை. சற்றைக்கெல்லாம் அந்த சகோதரி அதே படிக்கட்டில் மற்றொரு சகோதரியுடன் சேர்ந்து ஜெபிப்பதை இந்த சகோதரி கண்டார்கள். அந்த ஜெபம் கேட்கப்படுமா? அன்பில்லாத அந்த

சகோதரியின் வெளியரங்கமான, மற்றவர்கள் காணும்படியான அந்த ஜெபத்தை கர்த்தர் கேட்பாரா? பதில் கிடைக்குமா? இப்படிப்பட்ட கேள்விகளுடன் இந்த சகோதரி அந்த சபைக்கு செல்லாமலேயே கிளம்பி வந்து விட்டார்கள். மற்றவர்களிடம் அன்பு கொண்டிருப்பவர்களைப் போல நடிக்காமல், உண்மையாக அன்பு செலுத்த வேண்டும். உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக (ரோமர் *12:9*).

வெளிப்பார்வைக்கு மிகவும் நல்லவர்கள் போல இருந்த பரிசேயரின், வேதபாரகரின் உள்ளத்தில் இருந்த பாவக்கறை களை இயேசு கிறிஸ்து அறிந்திருந்தார். அவர்களை வெள்ளையடிக்கப் பட்ட கல்லறைக்கு ஒப்பாயிருக்கிறீர்கள் என்றும், விரியன் பாம்பு குட்டிகளே என்றும், குருடரான வழிகாட்டிகளே என்றும், மதிகேடரே, குருடரே, சர்ப்பங்களே என்றும் நேரிடையாக அவர்களை கண்டித்தார். அதனால் அவர்கள் அவர்மேல் கோபம் கொண்டனர். அவரை கொலை செய்ய வகை தேடினார்கள். நாமும் மனிதர்களிடம் அவர்களுடைய குறைகளை நேரிடையாக எடுத்துக் கூறினால், நம்மை பகைப்பார்கள். நம்மை பகைக்கிற இந்த உலகம், ஏற்கெனவே நமது ஆண்டவரை பகைத்தது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.



பாருங்கள் எனக்கு பிரியமானவர்களே, பரிசேயன் வீட்டில் இயேசு கிறிஸ்து சாப்பிடுகிறார். ஆனால், அவனுடைய மாய்மாலத்தை கடிந்து கொள்கிறார். அவர் எந்த மனுஷனையும் பிரியபடுத்தவில்லை. உண்மையான தம்முடைய அன்பை வெளிப்படுத்துகிறார். நாமும்கூட இப்படித்தான் இருக்க வேண்டும். ஒரு மனுஷனிடம் மாய்மாலம் இருந்தால், அதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, சரி செய்து கொள்ள சொல்ல வேண்டும். முதலில் அவர்கள் நம்மேல் கோபப் பட்டாலும், பின்னர் அவர்களது மனசாட்சி, நாம் சொன்னதையே சொல்லும் போது, அவர்கள் நம்மை புரிந்து கொள்வார்கள். அவர்கள் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்து செயல்படுவதுதான் உண்மையான அன்பு.

**“நல்லவர்கள் போல் நடித்து ஏமாற்றுபவர் கள்தான் மாய்மாலக் காரர்கள்”**

மற்றவர்கள் தங்களை மிகவும் நல்லவர்கள்,பக்தியுள்ளவர்கள் என்று சொல்லவும், பாராட்டவும் விரும்பி, நல்லவர்கள் போல் நடித்து ஏமாற்றுபவர் கள்தான் மாய்மாலக்காரர்கள். தங்களது உண்மையான குறிக்கோளை மூடிமறைப்பார்கள்.



நாம் எப்படியாக இருக்கிறோம்? நாம் மாய்மாலமற்ற வாழ்க்கை வாழுகின்றவர்களாக இருந்தோமானால், நாம் தேவனுடைய வருகைக்கு எப்பொழுதும், எந்த நேரமும் ஆயத்தமாயிருப்போம். மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துகிறவர்களாக காணப்படுவோம். முழு இருதயத்தோடு உள்ளத்தில் உணர்ந்து ஜெபிப்போம். தேவையோடிப்பவர்களின் தேவைகளை சந்திப்பவர்களாயிருப்போம். ஜனங்களை கர்த்தரண்டை வழிநடத்தி, அவர்கள் நற்செயல்களைச் செய்ய ஊக்கப்படுத்துகிறவர்களாயிருப்போம். உண்மை பேசுகிறவர்களாகவும், வேதத்தின் உண்மைகளை சரியாக பேசுகிறவர்களாகவும், தசமபாகம் செலுத்துவதோடு, நீதியுள்ளவர்களாகவும், இரக்கமுள்ளவர்களாகவும், விசுவாசமுள்ளவர்களாகவும் இருப்போம். உள்ளத்தில் தூய்மையுள்ளவர்களாகவும், அக்கிரமமில்லாதவர்களாகவும், கர்த்தருடைய ஊழியக்காரர்களை கனப்படுத்துகிறவர் களாகவும், மனிதர்களுக்கு பயப்படாமல் , அவர்களை பிரியப்படுத்தாமல் மாய்மாலமில்லாமல் வாழ்வோம்.

**“நல்ல நாள், நல்ல நேரம் பார்ப்பது, ஜாதி பார்ப்பது, சடங்காச்சாரமாக ஆண்டவரை ஆராதிப்பது போன்ற பாரம்பரியங்கள் கர்த்தருக்கு பிரியமில்லாதவை.”**

உண்மையான மனந்திரும்புதலில்லாமல் வாழ்வது, நல்ல நாள், நல்ல நேரம் பார்ப்பது, ஜாதி பார்ப்பது, ஆவியோடும் உண்மையோடும் இல்லாமல் சடங்காச்சாரமாக ஆண்டவரை ஆராதிப்பது போன்ற பாரம்பரியங்கள் கர்த்தருக்கு பிரியமில்லாதவை. ஆகையால் இவைகளை நாம் பின்பற்றக்கூடாது. உள்ளத்தில் மாறுதலில்லாமல், பரிசுத்தமாக வாழவேண்டும் என்ற வாஞ்சையில்லாமல் பெயருக்கு கிறிஸ்தவர்களாக வாழ்பவர்கள் ஒவ்வொருவரும் மனந்திரும்பி உள்ளத்தில் தூய்மையோடுகூட வாழ தங்களை ஒப்புக் கொடுக்கவேண்டும்.

---

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | ரூ. | 200/- |
| **வெளிநாட்டு வருட சந்தா** | ரூ. | 2000/- |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

ICICI **வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் :** 0350 0150 7744

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜூ பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

**உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்**

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

இணைய தளம் : **www.kennedyministries.org**




**டான் மோய்ன்** - இயற்றி, பாடிய ஆராதனை பாடல்கள் அடங்கிய தொகுப்பு 'ஐ பிலீவ் தேர் இஸ் மோர்' **(I Believe There is More)** தமிழில் இப்படி சொல்லலாம் - 'இன்னும் அநேகத்தை வைத்திருக்கிறீர் என்று விசுவாசிக்கிறேன்'.

ஓ, ஆபிரகாமின் தேவனே / நீர் மிகவும் பெரியவர் / உம்மால் எதையும் செய்ய முடியும்/ வல்லமையுள்ள வார்த்தைகளை உடையவரே/ வார்த்தையினால் சலகத்தையும் உண்டாக்கினவரே / ஓ, இஸ்ரவேலின் தேவனே/ எங்களோடிருக்கும் தேவனே / எங்கும் வியாபித்திருப்பவரே/ கிருபையின் தேவனே / நீரே எனக்கு எல்லாம் / என் பிரார்த்தனைகளைக் கேட்பவரே..

பரலோகத்தில் உம்முடைய நாமம் தவிர வேறொரு நாமம் இல்லை / பூலோகத்தில் உம்முடைய நாம் தவிர வேறொரு நாமம் இல்லை / உமது நாமமே எங்களை இரட்சிக்கும் / இரட்சிக்கப்பட வேறு வழி கிடையாது / ஆகவே, உம்மை ஆராதிக்கிறோம், எங்கள் ராஜாவே / வானத்திற்கு வண்ணம் தீட்டுபவரே/ பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமே / எங்கள் வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்பவரே / ஆதியும் அந்தமுமானவரே / அக்கினியாய் இருப்பவரே/ எங்கள் இருதயத்தை அனல்மூட்டுமய்யா /இயேசுவின் அன்பைப் போல் வேறொரு அன்பு இல்லை / உம்மைப் போல் உண்மையுள்ள நண்பன் யாருமில்லை / வேறொரு அடைக்கலம் இல்லை / எங்கள் வாழ்வின் மகத்துவமே/ உம் அன்பு எங்களை புதிதாக்கினது / என்னை புரிந்து வைத்திருப்பவரே / என்னை எனக்கு காட்டுபவரே / உம்முடைய கிருபை போதும் / தகுதியில்லை என்று நினைக்கும் நான் / உம்முடைய அன்பைக் கண்டேன் / நீர் என்னை ஏற்றுக் கொண்டீர் / என் பாவங்களை மன்னித்தீர் / உம்முடைய கிருபை போதும் / தகுதியில்லை என்று நினைக்கும் என்னை அதிகமாக நேசிக்கிறீர் / இப்போது எப்படி நான் இருக்கிறேன் என்பதல்ல / எப்படியாக இனி இருக்கப் போகிறேன் என்பதே காரியம் / நீர் என்னை உயர்த்துவதற்காக எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கிறீர் / எனக்காக ஒரு தரிசனத்தை வைத்திருக்கிறீர்..

நான் கேட்ட உம்முடைய சத்தியத்திற்கு என்னை அர்ப்பணிக்கிறேன் / என் இருதயத்தை தாழ்த்துகிறேன் / நீர் பேசுவதை கேட்கிறேன் / நான் மறுக்கவில்லை / உம்மைப் பின்பற்ற என்னை அழைக்கிறீர் / ஆம் என்று சொல்கின்றேன் / உம்மை விசுவாசத்தோடு பின்பற்றி வருகின்றேன் / உம்முடைய வழிகளில் நடக்கின்றேன் / என் இருதயத்தை உமக்குத் தருகிறேன்/ உம்முடைய சித்தத்திற்கு, வழிகளுக்கு, நோக்கத்திற்கு ஆம் என்று சொல்கின்றேன் ஆண்டவரே/ ஒவ்வொரு நாளும் உமக்காக வாழ்கிறேன் / உம்முடைய தேவைக்கு, ஏவுதலுக்கு, சொல்லுக்குக் கீழ்ப்படிகிறேன்..

www.donmoen.com



" கடந்த காலமெல்லாம் - நீர் எனக்கு நல்லவராக இருந்தீர்/ கிருபையுள்ளவராக இருந்தீர் / உண்மையுள்ளவராக இருந்தீர்/ என் தேவைகளையெல்லாம் சந்தித்தீர் / இன்னும் அநேகத்தை வைத்திருக்கிறீர் என்று விசுவாசிக்கிறேன் "

உம்முடைய அன்பைப் பாட விரும்புகிறேன் / உம்முடைய இரக்கத்தைப் பாட விரும்புகிறேன் / உம்முடைய மகத்துவத்தை இந்த உலகத்துக்குச் சொல்ல வாஞ்சிக்கிறேன் / இயேசுவே உம்முடைய நாமத்தை உயர்த்துகிறேன்/ உம்முடைய நாமம் பரலோகத்துக்கும் மேலானது / தேசங்களுக்கு மேலானது / இயேசுவே...

வல்லமையும் மகத்துவமும் உம்முடையது / சிங்காசனத்தில் வீற்றிருப்பவரே/ விடுதலை பெற்றவர்கள் பாடுகிறோம், கேளும் ராஜாவே / நாங்கள் பாடும்பொழுது உம்மை உயர்த்துவோம்...

நான் பாரஞ் சுமக்கிறேன் / நீர் என்னை சுமக்கின்றீர் / நன்றி ஆண்டவரே,எனக்கு விடுதலை தந்ததற்காக / என்னுடைய துக்கத்தையெல்லாம் சந்தோஷமாக மாற்றிப்போட்டீர் / நான் சந்தோஷப்படுவதற்கு காரணங்கள் உண்டு/ என்னை தடை பண்ணின சுவர்களையெல்லாம் தகர்த்துப்போட்டீர் / நான் உரத்த சத்தத்தோடு பாடுவேன் / நான் எங்கே இருந்தேனோ அங்கு திரும்பிப் போகமாட்டேன் / மனுஷர்களுக்குப் பயந்த வாழ்க்கைக்குத் திரும்பிப் போகமாட்டேன் / உம்மைப் பற்றிக் கொண்டேன்.

நீர் மகிமைப்படும் / என் ஒவ்வொரு இருதயத் துடிப்பிலும் / என் ஒவ்வொரு பாட்டினாலும் / என் ஒவ்வொரு ஜெபத்தினாலும் / என் ஒவ்வொரு காணிக்கையினாலும் / என் ஒவ்வொரு சிந்தனையினாலும் / ஒவ்வொரு நாள் காலையைத் தொடங்கும்போதும் / இரவு முடியும் வரை உம்மை துதிப்பேன், மகிமைப்படுத்துவேன் / என் வாழ்க்கையை உமக்குஅர்ப்பணிக்கிறேன், ஆண்டவரே இதுதான் என் பிரார்த்தனை / இதுவே என் இருதயத்தின் கதறுதல் / ஆண்டவரே, என் வாழ்க்கையில் உம்மை நான் பிரதிபலிக்க வேண்டும்.

நொறுங்கின இருதயமுள்ளவர் பாடட்டும் / சிறைப்பட்டவர்கள் விடுதலையானோம் என்று சொல்லட்டும் / விதவைகள் புது சந்தோஷத்தைக் காணட்டும் / இழந்தவன் மகிழட்டும் உம்மை துதிக்கும்போது...

உமது இரக்கத்துக்காக நன்றி / உமது கிருபைக்காக நன்றி / உமது இரத்தத்திற்காக நன்றி / அதுவே வழியைத் தந்தது / உம் நாமத்தை மகிமைப்படுத்துகிறோம் / என்மேல் நீ பாராட்டின இரக்கத்தைப் பார்த்து பிரமித்து நிற்கிறேன் / உமது வாக்குத்தத்தங்கள் காலங்களுக்கு அப்பாற்பட்டவை / உமது அன்பிற்கு முடிவில்லை / அவை ஆயிரம் தலைமுறைகளுக்கு உண்டு / உமது நாமத்துக்கு பயந்தவர்களுக்கு...




**நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.**

**- 1 யோவான் 5:14**

நமக்கு எது நல்லது? எது கெட்டது? என்பதை நம் பரம தகப்பன் அறிந்து வைத்திருக்கிறார். அவற்றைத் தெரிந்து கொண்டு, அதன்படி ஜெபிப்பது நல்லது. அவற்றை எப்படி தெரிந்து கொள்வது? தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய வேத புத்தகமே தேவ சித்தம் ஆகும்.

யோசேப்பு, தானியேல், தாவீது, மோசே, பவுல் - இவர்களைப் பற்றியெல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால்,என்னைப்பற்றி எழுதப்படவில்லையே என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள்கேட்பது சரியே. தொடர்ந்து, தினமும் வேதத்தை படித்துக் கொண்டே இருக்கவேண்டும். அப்பொழுது, முதலில் நமக்கு தெரிய வருவது, தேவன் செய்த செயல்களே. மீண்டும், மீண்டுமாகத் தொடர்ந்து நாம் வேதத்தை படிக்கும்போது,கர்த்தர் ஒரு மனுஷனிடம் எதையெதை எதிர்பார்க்கிறார். எவையெல்லாம் அவருக்குப் பிடித்தது, எதையெல்லாம் அவர் வெறுக்கிறார் என்பவற்றையெல்லாம் நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். தொடர்ந்து வேதத்தைத் தியானிக்கும்போது கர்த்தருடைய சிந்தையை நாம் தெரிந்து கொள்ளலாம். அவருடைய இருதயத்தில் உள்ளவற்றையும் நாம் புரிந்து கொள்ளலாம். அப்படிப்பட்ட ஒரு முதிர்ச்சி நமக்கு வரும்போது, நம்மிடம் கர்த்தர் என்ன எதிர்பார்க்கிறார் என்பது தெரிந்துவிடும். ஏனென்றால், கர்த்தருடைய ஆவியானவர், வேதத்தின் வார்த்தைகளை எடுத்து நம்மிடம் பேசுவார்.நம்முடைய சூழ்நிலை என்ன? நாம் எப்படிப்பட்ட முடிவு எடுக்கவேண்டும்? அப்படி செய்யும்போது அதன் முடிவு எப்படி இருக்கும்? இப்படி எல்லாவற்றிற்குமானப் பதிலை வேதத்தின் வார்த்தையை நமக்கு ஞாபகமூட்டி, அந்த வார்த்தைக்குள் புதைந்திருக்கும் இரகசியங்களை நமக்கு



வெளிப்படுத்தி, நம்மை வழி நடத்துவார். அவர் யோசனையில் பெரியவர், ஆலோசனையில் ஆச்சரியகரமானவர். அவரே ஆலோசனைக் கர்த்தர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தேவன் தம்முடைய சித்தத்தை தம்முடைய பிள்ளைகளுக்கு வெளிப்படுத்த, தம் சித்தத்தை வெளிப்படுத்தும் வார்த்தையை இயேசு கிறிஸ்துவாக இந்த உலகத்திற்கு அனுப்பினார்.

**ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்தவார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்..**

**- யோவான் 1:1,14**

தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தும் வார்த்தை மாம்சமாகி இயேசு கிறிஸ்துவாய் இந்த பூமியிலே இருந்ததுபோல, இப்போது வார்த்தையாக இயேசு கிறிஸ்து நம்மோடுகூட இருக்கிறார். இதைத்தான் அப்போஸ்தலனாகிய யோவான் இப்படியாகக் கூறுகிறான்:

**ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவ வார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.**

**- 1 யோவான் 1:1**

ஏன் தேவனுடைய சித்தம் அவசியம் என்று நாம் நினைக்கலாம். தேவனுடைய சித்தத்தை அறிந்து அதின்படி நாம் நடக்கும்போது மாத்திரமே இந்த உலகம் தர முடியாத, இந்த உலகத்திலிருந்து நாம் பெறமுடியாத சமாதானத்தை நாம் பெற்றுக் கொள்ள முடியும் (கொலோசெயர் *3:15*, பிலிப்பியர் *4:6-7*). அப்போஸ்தலனாகிய பவுல் இவ்வாறு மிகவும் சரியாகச் சொல்லுகிறான்: எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் என்று. எல்லா புத்திக்கும் மேலான என்று பவுல் குறிப்பிடுவது என்னவென்றால்,இந்த உலகத்து மனிதர்கள் ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாது இந்த சமாதானம் நமக்குள் எப்படி வந்தது என்று. காரண காரியங்களை ஆராய்ந்து அறிய முடியாது. மனித அறிவிற்கும், ஞானத்திற்கும் அப்பாற்பட்டு நடக்கிற காரியம் இது. இயேசு கிறிஸ்துதான் நமக்கு எல்லாவற்றுக்கும் முன் மாதிரி. ஜெபிப்பதற்கும் அவரேதான் நமக்கு முன்மாதிரி. இந்த பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கட்டும். ஆனாலும் என்னுடைய சித்தத்தின்படி அல்ல, உம்முடைய சித்தத்தின்படி நடக்கட்டும் (மத்தேயு *26:39*) என்று ஜெபிக்கிறார். தேவ சித்தம் எவ்வளவு முக்கியம் என்பது இப்போது நமக்கு தெரியும். அதனால் நாம் வேதத்தைப் படிப்போம், தேவ சித்தத்தை அறிந்து கொள்வோம். அதின்படி ஜெபிப்போம். தேவ சித்தம் நம் வாழ்க்கையில் சமாதானத்தைக் கொண்டு வரட்டும். ஆமென்!